FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C) / (குநவி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

1. District : திண்டுக்கல் PS: ஊ.தி.கு.பிரிவு Year: 2026 FIR No.: 06/2026 Date: 12.06.2026
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988, as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018.

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act . சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 11.06.2026 at 13.00 hrs, 14.45 hrs.
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

   Time Period : Time from : Time to : 11.06.2026 at 15.18 hrs & 15.19 hrs - over whatsapp voice call
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 12.06.2026 Time : 09-15 hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : எழுத்துமூலமாக
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: திண்டுக்கல் RTO அலுவலகத்தின் வாசல் அருகில் தெய்வம் திருமண மண்டபம், - சுமார் 2 கி.மீ வடமேற்கு.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

   Beat Number : — (b) Address : —
   முறைக் காவல் என் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : அ. சென்னகேசவன் (b) Father's/ Husband's Name : சு. அய்யன் கோபால்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

   (c) Date / Year of Birth : 4-2/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : — Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : வழக்கறிஞர் (g) Address : 1வது சந்து, ரோமன் மிஷன் ஸ்கூல் பக்கம், - திண்டுக்கல்.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு. தினகரன் ஆனந்த், மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், திண்டுக்கல், 2. திரு. ஹக்கீம், உதவியாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: —
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

12/06/26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.06.2026 - 12.00 hrs.

Name: பெயர் ப.பத்மநித்தமி

Rank: நிலை .....No. எண் .....

காவல் ஆய்வாளர்

மாடல் தடுப்பு மறிநடம் கேள்வாணிப்பு முரிவு
திண்டுக்கல்.

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:6/2026 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

Column No.12, FIR Contents

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 12.06.2026-ம் தேதி காலை சுமார் 09.15 மணிக்கு நிலையத்தில் இருந்த போது திண்டுக்கல். ஒய்.எம்.ஆர். பட்டி, 24, ரோமன் மிசின், 1வது சந்தில் வசிக்கும் சு.அய்யன் கோபால், பி,ஏ,பி.எல் மகன் வழக்கறிஞர், திரு.அ.சௌந்தரராஜா, பி,ஏ,பி.எல் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காலை 10.15 மணிக்கு கீழ்க்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர். நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். எனது சொந்த சித்தப்பா திரு.S.பாலகிருஷ்ணன், அவர்கள் 2 லாரிகளை வைத்து தொழில் செய்து வருகிறார். அவருக்கு சமீபத்தில் ஒரு விபத்து ஏற்பட்டதால் முதுகில் காயம் ஏற்பட்டு வீட்டில் ஓய்வில் இருந்து வருகிறார். எனவே என்னிடம் அவருக்கு சொந்தமான TN 01B 8578 என்ற Ashok Leyland goods vehicle வாகனத்திற்கு fitness certificate renewal செய்வதற்கு அதற்காக போக்குவரத்து துறையின் VAHAN இணையதளதத்தில் பதிவு செய்து renewal வேலையை முடித்து தருமாறு கூறினார். அதனால் நானும் அந்த வேலையை முடிப்பதற்காக 10/06/2026 அன்று TN 01 B 8578 Ashok Leyland லாரிக்கு fitness certificate renewal செய்வதற்காக VAHAN இணையதளத்தில் விண்ணப்பம் சமர்பித்தேன். அதற்கு fitness inspection கட்டணமாக ரூபாய் 1600 சேவை கட்டணமாக ரூபாய் 50 என மொத்தம் ரூபாய் 1650 இணைய வழியில் செலுத்தினேன். அந்த விண்ணப்பதிற்கான Receipt No. TN260610V6547856 / TN260610C6545400, Dated:10/06/2026 என்பதாகும். அந்த வாகனத்தினை திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 அவர்களின் சோதனைக்கு slot booking நேரமாக 11/06/2026 12 மணி முதல் 4 மணி வரை ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே எனது சித்தப்பா லாரியை நான் அதன் ஓட்டுநர் முருகையா என்பவரும் திண்டுக்கல் RTO அலுவலக அதிகாரிகள் ஆய்வு

செய்யும் மைதானத்திற்கு பிற்பகல் சுமார் 1.00 மணி அளவில் சென்றோம். அப்போது அந்த மைதானதில் பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த எங்களது லாரியை ஆய்வு செய்தார். அப்போது லாரி அருகே நின்று கொண்டிருந்த என்னிடம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் அவர்கள் லாரியை ஆய்வு செய்து Fitness renevwal செய்ய வேண்டு மென்றால் 4+18 தர வேண்டும் என்றார். நான் என்ன சார் என்று கேட்டதற்கு வாகனங்களுக்கு வருடம் தோறும் Fitness Certificate renewal செய்ய வேண்டும் என்றால் ரூபாய் 1800ம் லாரியானது மிகவும் பழைய வண்டியாக இருப்பதால் ரூபாய் 4000ம் லஞ்சமாக அருக்கு கொடுக்க வேண்டும் என்றார். அதற்கு நான் ரூபாய் 5,800/- தர வேண்டுமா சார் என்று கேட்டேன். ஆமாம் என்று கூறிய அவர் அதனை Hakkim என்ற நபரிடம் கொடுத்துவிடுமாறு தெரிவித்தார். சிறிது நேரத்தில் எங்கள் லாரி அருகே ஒரு நபர் அவரது பெயர் Hakkim என்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் அவர்களின் உதவியாளர் என்று தெரிவித்து அவரது மொபைல் எண். 9003735912 என்றும் அவரது மொபைலுக்கு அழைக்குமாறு தெரிவித்தார். நானும் எனது மொபைல் எண். 7845930148 என்ற எண்ணிலிருந்து அவருக்கு Missed call கொடுத்தேன். அதன் பின்னர் சுமார் 2.45 மணிக்கு திரு.Hakkim அவர்கள் மேற்படி மொபைல் எண்ணிலிருந்து என்னை அழைத்து Employment Office அருகே இருப்பதாகவும், MV Inspector கேட்ட பணம் ரூபாய் 5,800யை கொண்டு வந்து தரமாறு கூறினார். அதற்கு நான் Relector Sticker யை லாரிக்கு ஒட்ட சொல்லுவதால் அதனை வாங்க செல்வதாகவும் வாங்கிவிட்ட பின் கொடுப்பதாதகவும் தெரிவித்தேன். அதன் பின் சுமார் 3.18 மற்றும் 3.19 மணிக்கு திரு.Hakkim எனது மொபைல் எண்ணிற்கு Whatsapp voice call செய்து வேகமாக கேட்ட பணம் வந்து தருமாறும் MV Inspector கேட்பதாகவும் கூறினார். அதற்கு நான் கையில் இருந்த பணத்தை என்னுடன் வந்த ஓட்டுனரிடம் கொடுத்து விட்டதாகவும், வீட்டிற்கு சென்று எடுத்து கொண்டு வந்து தருவதாகவும் தெரிவித்தேன். எனக்கு சிறிது வேலை இருந்ததால் அவரை சென்று பார்க்கவில்லை. அதன் பின் நேற்று 11/06/20/26 இரவு சுமார் 10.30 மணிக்கு திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து திண்டுக்கல் பேருந்து நிலையம் செல்லும் ரோடு வழியில் சென்று கொண்டிருந்தேன். அப்போது ஏதேசியாக அந்த சாலையில் எதிராக பைக்கில் வந்து கொண்டிருந்த திரு.Hakkim என்னிடம்

அண்ணே பணம் என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் எனது சித்தப்பா உடம்பிற்கு முடியாமல் இருந்ததால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் நாளைக்கு வந்து கொடுத்து விடுகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் நாளைக்கு Employment Office அருகே வந்துவிட்டு உங்களது மொபைலில் அழைக்குமாறும் அங்கு வந்து பணத்தை கேட்டு வாங்கி கொள்வதாகவும் என்று கூறினார். நானும் சரி என்று கூறினேன். எனது சித்தப்பாவிற்கு சொந்தமான Ashok Leyland லாரிக்கு Fitness Certificate Renewal பெற லஞ்சமாக ரூபாய் 5,800 கேட்கும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் மற்றும் அவரது உதவியாளர் திரு.Hakkim ஆகியோர்களுக்கு அந்த பணத்தை லஞ்சமாக கொடுத்து வேலையை முடிக்க எனக்கும் எனது சித்தப்பாவிற்கும் விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக 5800 கேட்ட திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சண்முக ஆனந்த் மற்றும் அவரது உதவியாளர் திரு.Hakkim ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இத்துடன் பணம் ரூபாய் 5800ம் கொண்டு வந்துள்ளேன். மேலும் இத்துடன் என் சித்தப்பா பெயரிலான அசோக் லைலாண்டு லாரியின் RC Book நகல் மற்றும் Fitness Certificate Renewal க்கு செலுத்திய கட்டண ரசீது ஆகியவற்றின் நகலை இணைத்துள்ளேன். மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு, Sd/- xxxxx (அ.சௌந்தரராஜா, 12.06.2026).

Sir, Received the complaint on 12.06.2026 at 09.15hrs and made a Confidential Verification on the general reputation of the accused, the motives, reliability and antecedent of the complainant and came to know that nothing adverse against the complainant and the reputation of the accused is learnt to be not good. Hence, a case in Dindigul V&AC, Cr.No.06/2026, u/s.7(a) of the Prevention of Corruption Act 1988, as amended in 2018, was registered today at 10.15 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 12.06.2026).

Original FIR along with Computer Written complaint of Tr.A.Soundararaja, B.A.B.L., S/o. S.Ayyan Gopal, B.A.B.L, 24, Roman Mission 1st Sandhu, Y.M.R.Patti, Dindigul and with the relevant documents are submitted to the Hon'ble Principle District Sessions Court, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(P.Palanisamy), 12/06/26
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dindigul